(முற்பகல்-11.00)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழக முதல்வர்தான் வழிகாட்டும் வகையில் தமிழ்நாடு சட்டம் 7/84 என்ற வீடியோ சம்பந்தமான கட்டுப்பாடு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பிரபல நடிகர் ராஜ்கபூர் அவர்கள், இது வழிகாட்டும் சட்ட மாக இருக்கிறது, இந்திய அரசில் பல்வேறு மாநிலங்கள் கடைபிடிக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் தண்டணை பற்றிய செக்ஷன் 10-ன் கீழ் இப்போது விதிகளை மீறுவோர் 3 மாதம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும் என்பதை 3 மாதம் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் அல்லது தேவையானால் தண்டனை 3 மதத்தி லிருந்து 6 மாதமாக உயர்த்தலாமா என்று அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது: அண்மையில் திரையரங்கு உரிமையாளர்கள் இந்த வீடியோ கேஸட்டுகள் கள்ளத்தனமாக தயாரிக்கப் படுவதையும், விற்கப்படுவதையும், வாடகைக்கு கொடுக்கப் படுவதையும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். திரைப்பட தயாரிப்பாளர்கள் அயல் நாட்டுக்கு உரிமம் வழங்கு கின்றபோது தமிழ்நாட்டில் அல்லது இந்தியாவில் திரைப் படங்கள் திரையிடப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன்பே அவர்கள் அந்தத் திரைப்படங்களைக் கொடுத்துவிடுவதால், சிங்கப்பூரிலும் கீழ்த்திசையில் அரபு நாடுகளிலும் அவைகள் திருட்டுத்தனமாக வீடியோ கேஸட்டுகளாகத் தயாரிக்கப்பட்டு இங்கு அனுப்புவதாக சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி நேற்றையதினம் கூட பம்பாயில் உள்ள படத் தணிக்கை உயர் அதிகாரிகள் அவர் களும், தமிழ்நாட்டில் உள்ள மண்டல அதிகாரி அவர்களும் உள்துறை செயலாளர் அவர்களும் கலந்து பேசி இதுமாதிரி கள்ளத்தனமாக வீடியோ கேஸட் படம் தயாரிப்பவர்களைக் கடுமையாக தண்டிப்பதற்கு ஆய்வுசெய்து கொண்டு வரு கிறார்கள்

நீலகிரியில் காட்டு வளம்.

175—(* வினா எண் 11758) திரு. கே உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் காட்டுவளம் அழிவதை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் காட்டு வளம் அழியாமல் பாதுகாக்கும்பொருட்டு, 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் ஆகிய சட்டங்கள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு இச்சட்டங்களை மீறு பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வழிவகை செய்யப்பட் டுள்ளது. திருத்தப்பட்ட 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்

1987 ஏப்ரல் 1]

சட்டத்தின்படி, ''Scheduled Timber'' என்று வகை செய்யப் பட்டுள்ள தேக்கு, சில்வர் ஓக், சந்தனம் மற்றும் ஈட்டி ஆகிய மரங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக தண்டனையும் கடுமையாக்கப்பட்டுள்ளது. 1982–83 முதல் இயற்கைக் காடுகளில் விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

திருவில்லிபுத்தூர் தொகுதி கட்டயதேவன்பட்டி ராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள்.

176—(*வினா எண். 100)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, கட்டயதேவன்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடமக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் இடித்துள்ளதுஅரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இடிந்தவீடுகளை பழுதுபார்த்தல் அல்லது புதிதாகக் கட்டும் பணியை மேற்கொள்ளுவதற்கான காமராசர் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு அரசின் ஆய்விலுள்ளது.

ஆதிவாசிகள் மேம்பாட்டிற்கு சிறபபுத் திட்டம்.

244 (*வினா எண். 7398)—திரு. ம. சின்னராசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஆதிவாசிகள் மேம்பாட்டிற்கு என்று சிறப்புத்திட்டம் எதுவும் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) இத்திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி எதுவும் கோரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மாநில அரசால்1976-77 முதல் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நிதி உதவி அளித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

128,42—5